1983 பிப்ரவரி 10]

8. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 32(1)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32(') ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று (10-2-1983) அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முன்னவர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்து கொள்வதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், இன்றைக்குத் தனித் தீர்மானம் என்ற முறையில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்ற தீர்மானங்கள் மிகவும் முக்கியமானவை. ஒன்று, திரு. உமாநாத் அவர்களால் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்குதல் குறித்த தீர்மானம். மற்றொன்று, ஆளுங்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் கொடுத்துள்ள ''சென்னை உயர்நீதி மன்றம் என்பது தமிழ்நாடு உயர் நீதிமன்றம்'' என்று பெயர் மாற்றம் செய்யக்கோரும் தீர்மானமாகும். இந்தத் தீர்மானங்கள் மிகவும் முக்கியமானவை என்பதால் இந்தத் தீர்மானங்கள் விவாதத்திற்கு இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படுவது அவசியமானதாகும். எல்லாவற்றிற்கும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கின்ற நாம் இந்தத் தீர்மானம் குறித்து இன்றைக்கு விவாதிப்பது பொருத்தமுடையதாக இருக்கும். ஆகவே, இதைப் பற்றிய விவாதத்தை இங்கே நடத்தினால் நாட்டுக்கும் நல்லது, தமிழகத்திற்கும் நல்லது ஆகவே, அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு முறைப்படி வியாழக்கிழமை என்பதால் தனியார் அலுவல்கள் தான் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும். ஆனால், நேற்று நிறைவேற்றப்பட வேண்டிய சட்ட முன்வடிவுகள் நிறைவேற்றப்படமுடியாத காரணத்தால், இன்றைக்கு அந்தச் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றினால்தான் அவைகளை சட்டமன்ற மேலவைக்கு அனுப்பி வைக்க முடியும். ஆனால், இந்தத் தனியார் அலுவல்களுக்கான இந்தக் கூட்டத் தொடரிலேயே இன்னொரு நாள் ஒதுக்குவது என்பதற்காகத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இன்றைக்கு 11 மணிக்கு அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தைக் கூட்டியிருக்கிறார்கள். அநேகமாக இந்த மாதம் 14, அல்லது 15 ஆம் தேதி தனியார் தீர்மானங்கள் எடுத்துக் கொள்வதற்கு ஒதுக்கலாம் என்ற யோசனை இருக்கிறது. அது பற்றிய ஆலோசனைகளை மேற்

கொண்டு, ஒரு நாள் அதற்காக ஒதுக்குவதற்குத்தான் இன்றைக்கு 11 மணிக்கு அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தைப் பேரவைத் தலைவர் அவர்கள் கூட்டியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32(1) ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று (10–2–1983) அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 11-10)

(ஆ) அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மற்றொரு மசோதாவின்மீது மேலவையில் பதிலளிப்பதற்காக, அந்த அவை நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருப்பதால் அவர்கள் பெயரில் முதலில் இருக்கிற சட்ட முன்வடிவை இன்றே இறுதியில் எடுத்துக் கொள்ளலாம் என்ற வகையில் நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 30(3) இன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் ',அரசினர் சட்ட முன்வடிவுகள்'' என்ற தலைப்பில் இனம் (1) இல் இருக்கிற ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1983)' என்ற சட்ட முன்வடிவை, இனம்(6) 'தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1983)' என்ற சட்ட முன்வடிவுக்குப் பின்னால் எடுத்துக்கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS